யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

முதலாம் தவணைப் பரீட்சை - 2015

பரதநாட்டியம்

தரம் :- 10	சுட்டெண்:-	நேரம்:- 3 மணித்தியாலம்

பகுதி - I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

❖ பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

01) நர்த்தகிக்குரிய பகிப்பிராணன்கள் எத்தனை?
1) 8 2) 10 3) 6 4) 4

02) "IIOO" எனும் குறியீட்டுக்குரிய தாளம்
1) திரிபுடை தாளம் 2) அட தாளம் 3) ஜம்பை தாளம் 4) ரூபக தாளம்

03) பாத்திர பிராணனின் "அஷ்ரமஹ" என்பதன் பொருள்
1) புத்திக்கூர்மை 2) கண்பார்வை 3) உறுதி 4) களைப்பின்மை

04) தசவதாரங்களை எடுத்தவர் யார்?
1) சிவன் 2) விநாயகர் 3) விஷ்ணு 4) பார்வதி

05) ஹம்சனை அழிக்க எடுத்த அவதாரம்
1) கிருஷ்ண அவதாரம் 2) வாமண அவதாரம்
3) கூர்ம அவதாரம் 4) பரசுராம அவதாரம்

06) கோர்வையின் இறுதியில் அமைய வேண்டிய அடவு
1) பரவல் அடவு 2) நாட்டடவு 3) மகுட அடவு 4) குத்தடவு

07) பின்வருவனவற்றுள் தொழில்சார் நடனம் அல்லாதது எது?
1) மீனவ நடனம் 2) கொழுந்து நடனம்
3) அருவி வெட்டும் நடனம் 4) ஒயிலாட்டம்

08) 10ம் நூற்றாண்டில் தஞ்சைப் பெருங்கோயில் எந்த மன்னனால் கட்டப்பட்டது?
1) பாண்டிய மன்னன் 2) பல்லவர் மன்னன்
3) இராஜ இராஜ சோழன் 4) யாவும் பிழை

09) கிராமிய நடனத்துக்குப் பயன்படுத்தப்படும் வாத்தியம் எது?
1) உடுக்கு 2) மிருதங்கம் 3) தம்புரா 4) டோல்கி

10) மங்கல வாத்தியம், இராஜ வாத்தியம் என்றழைக்கப்படும் தோற்கருவி எது?
1) மிருதங்கம் 2) தவில் 3) உடுக்கு 4) றபான்

11) தவில் செய்யப்படும் மரம்
1) வேம்பு 2) பாலை 3) மூங்கில் 4) பலா

12) சுற்றுதலை பிரதிபலிக்கும் பாதபேதம்
1) பாதசாரிகா 2) பிரமரி 3) உத்பிளவனம் 4) மண்டலம்

13) "ஸங்க பூரணே" என்ற விநியோகம் கொண்ட ஹஸ்தம்
1) அஞ்சலி 2) சகேபதம் 3) டோளம் 4) கற்கடகம்

14) சுளகினை அசைத்து ஆடப்படும் நடனம்
1) ஒயிலாட்டம் 2) சுளகு நடனம் 3) செம்பு நடனம் 4) கோலாட்டம்

kalvi.lk

15) பல அடவுகளின் சேர்க்கை
1) தீர்மானம் 2) சொற்கட்டு 2) கோர்வை 4) அடவு

16) உருப்படி வரிசையில் ஆரம்ப உருப்படியாக அமைவது
1) வர்ணம் 2) அலாரிப்பு 3) ஜதீஸ்வரம் 4) தில்லானா

17) இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் அசைவு
1) முகில் அசைந்து செல்லல் 2) மழை பெய்தல்
3) சுனாமி அலைகள் 4) அருவி நீர் பாய்தல்

18) கைகள் செல்லுமிடத்துக்கு .... செல்ல வேண்டும்
1) கால்கள் 2) கண்கள் 3) தலை 4) வாய்

19) "தகிடதகதிமி" என்பது
1) திஸ்ரம் 2) சதுஸ்ரம் 3) மிஸ்ரம் 4) கண்டம்

20) சங்க காலத்தில் பெண்கள் மட்டும் ஆடும் கூத்து
1) துணங்கை கூத்து 2) குரவைக்கூத்து
3) வள்ளிக்கூத்து 4) வேலன் வெறியாட்டு

21) எசலபெரஹர நடக்கும் நாட்கள்
1) 90 2) 60 3) 80 4) 10

22) தேவஹஸ்தத்தில் முருகனுக்குரிய ஹஸ்தத்தை ஒத்த ஹஸ்தம்
1) பார்வதி 2) சிவன் 3) சனி 4) வருணன்

23) கண்டிய நடனத்தின் பிரதான வாத்தியம்
1) செண்டை 2) மத்தளம் 3) கெற்றபெரய 4) உடுக்கு

24) "பரதகுல......" எனத் தொடங்கும் ஸ்லோகம்
1) அரங்கதேவதாஸ்துதி 2) புஸ்பாஞ்சலி
3) நாட்டியக் கிரமம் 4) பாதபேதம்

25) சங்கமருவிய காலத்தை படம் பிடித்துக் காட்டும் இலக்கியம்
1) கம்பராமாயணம் 2) மகாபாரதம் 3) சிலப்பதிகாரம் 4) பெரியபுராணம்

26) தஞ்சை பொன்னைய அவர்கள் எத்தனையாவது வயதில் தஞ்சை பிரகதீஸ்வரர் திருவடியை அடைந்தார்?
1) 70 2) 95 3) 60 4) 50

27) தாளம் தொடங்கியபின் பாடல் இடம்பெறுவது
1) சம எடுப்பு 2) அதித எடுப்பு 3) அநாகத எடுப்பு 4) யாவும் சரி

28) ஆஹார்யம் என்பதன் பொருள்
1) தாராதி 2) சந்திரன் 3) ஆபரணம் 4) பரிசுத்தம்

29) ஆவர்த்தன முடிவைக் காட்டும் குறியீடு
1) ✳ 2) 〰 3) // 4) $\overline{\underline{IV}}$

30) சிவபெருமான் பார்வதியுடன் இணைந்து ஆடிய தாண்டவங்களின் எண்ணிக்கை
1) 48 2) 9 3) 12 4) 36

31) தஞ்சை நால்வரின் குரு
1) புரந்தரதாஸர் 2) முத்துத் தாண்டவர்
3) பாவநாசம்சிவன் 4) முத்துசுவாமிதீட்சிதர்

32) மிருதங்கச் சொற்கட்டைக் கொண்ட அடவுகள்
1) மகுட அடவுகள் 2) நாட்டடவுகள் 3) பரவல் அடவுகள் 4) வீச்சடவுகள்

kalvi.lk

33) கர்நாடக சங்கீதத்தில் முதன் முதலில் வயலினை அறிமுகப்படுத்தியவர்
1) சின்னையா 2) வடிவேலு 3) பொன்னையா 4) சிவானந்தம்

34) மேலே உள்ளவற்றை பார்ப்பதற்கு பயன்படுத்தப்படும் சிரோதிஷ்டி பேதம்
1) ஆலோலிதம், நமீலிதம் 2) கம்பிதம், அனுவிருத்தம்
3) துதம், சாச்சி 4) உத்வாஹிதம், உல்லோகித

35) இசை எடுக்கப்பட்ட வேதம்
1) இருக்கு 2) சாமம் 3) யசுர் 4) அதர்வணம்

36) "பெட்டியை மூடுதல்" எனும் நூலின் ஆசிரியர் யார்?
1) சம்புடம் 2) பேருண்டம் 3) புஸ்படுகம் 4) கூர்மம்

37) "அபிநய தர்பணம்" எனும் நூலின் ஆசிரியர் யார்?
1) வி. சிவசாமி 2) நந்திகேஸ்வரர் 3) இளங்கோவடிகள் 4) பரதமுனிவர்

38) செல்லும் வழியில் பாம்மைக் கண்டால் ஏற்படும் ரஸம்
1) ஹாஸ்யம் 2) ஆச்சர்யம் 3) பயம் 4) கருணை

39) "தாஹத்த ஜெம்தரிதா" அடவு அமைந்த தாளம்
1) ரூபகம் 2) ஏகம் 3) ஆதி 4) துருவம்

40) "மத்ஸயம்" எனும் ஸம்யுதஹஸ்தத்தை பிரித்தால் வரும் அஸம்யுதஹஸ்தம்
1) அர்த்தச் சந்திரன் 2) திரிபதாகம் 3) பதாகம் 4) மயூரம்

(40 × 1 = 40 புள்ளிகள்)

பகுதி - II

➢ **1ம் வினா, உட்பட மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01)
i) நீர் இத்தவணையில் மேற்கொண்ட கணிப்பீட்டு வகை யாது? (02 புள்ளிகள்)
ii) செய்முறை கணிப்பீட்டில் மேற்கொண்ட அலகு யாது? (02 புள்ளிகள்)
iii) அவ்வடவினை தாள அங்க குறியீட்டில் எழுதுக. (08 புள்ளிகள்)

02) நாட்டிய பெண்ணிற்கு இருக்க வேண்டிய பாத்திர அந்தப் பிராணன்களையும் பதிப் பிராணன்களையும் தருக. (12 புள்ளிகள்)

03)
i) அவதாரங்கள் எத்தனை? (02 புள்ளிகள்)
ii) அவதாரங்களைக் கூறி அவதாரத்தின் தோற்றத்திற்கான காரணங்களையும் விளக்குக. (10 புள்ளிகள்)

04) பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
i) தவில்
ii) உடுக்கு
iii) நாட்டியதர்மி
iv) லோகதர்மி
(12 புள்ளிகள்)

05) தஞ்சைப் பெருங்கோயிலின் தோற்றம், கட்டிய மன்னன், அமைப்பு போன்றவற்றை விளக்குக. (12 புள்ளிகள்)

06) ஐந்து ஜாதிகளும் ஏழு தாளங்களும் இணைந்து 35 தாளங்களாகும் முறையினை அட்டவணை மூலம் விபரிக்குக. (12 புள்ளிகள்)

kalvi.lk

kalvi.lk

2025

1ம் தவணை வகுப்புகள்

தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

ஆரம்பம் 01.01.2025

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457